OS.No. 38/2013
Dated : 13.09.2023

Time: 12.08 p.m to 12.15 p.m

P.W- 2 சாட்சி பிச்சுமணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை:</u>

1) வாதியுடன் எனக்கு நெருங்கிய பழக்கம் உண்டு. கிரய ஒப்பந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். 14.03.2011 கிரய ஒப்பந்தம் வாசாஆ.1 எழுதப்பட்டது. எனக்கு என்ன விவரம், என்ன தொகை என்பது தெரியாது என்றால் தவறு, எனக்கு தெரியும். கிரய தொகையாக ரூ.4,99,000/- பேசப்பட்டது. முன்பணமாக அன்றைய தேதியிலேயே ரூ.4,50,000/- வாதி பிரதிவாதிக்கு கொடுத்தார். மீதி தொகையை ரூ.49,000 /- கொடுக்க 2 வருடம் காலஅவகாசம் கொடுக்கப்பட்டது. மேற்படி தொகையை செலுத்துவதற்கு மேற்சொன்ன காலஅவகாசம் வாதிக்கு தேவைப்பட்டது. அதனால் எழுதப்பட்ட சில மாதத்திற்குள் அந்த தொகையை வாதியால் ஏற்பாடு செய்ய முடியாது என்றால் சரிதான்.

2) நான் சொல்வது போன்று மேற்சொன்ன தேதியில் எவ்வித தொகையும் வாதி பிரதிவாதிகளுக்கு கொடுக்கவில்லை என்றால் அது தவறு. வாசாஆ.1 ஆனது அதற்கு முன்பாக வாங்கப்பட்ட கடனுக்காக எழுதப்பட்டது என்றால் அது தவறு. நானும் தர்மராஜ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். 1-ம் பிரதிவாதியின் மனைவியும் கையெழுத்து செய்துள்ளார். மேற்படி வாசாஆ 1 கடனுக்காக எழுதப்பட்டதால் தான் 2 ஆண்டு காலம் அவகாசம் கொடுக்கப்பட்டது என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**